**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 87/2018</u>**

நாள் 02.12.2024.

PW1 – வேலுச்சாமி
த/பெ – லேட். கருப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2024.)**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த பாக தாவாவை எனது அப்பா கருப்ப கவுண்டர் தான் தாக்கல் செய்தார். அவர் 26.02.2021–ம் தேதியில் இறந்து போய்விட்டார். எனது அம்மா வள்ளியம்மாள் நான் 8 வயது இருக்கும் காலத்திலேயே இறந்து போய்விட்டார். 2 முதல் 5 வாதிகள் எனது அப்பாவின் வாரிசுகள். அம்மாசை கவுண்டர் என்பவர் எனது தாத்தா ஆவார். எனது தாத்தாவிற்கு 3 பெண்கள், 3 ஆண்கள் வாரிசுகள் ஆவர். அந்த 3 பெண் பிள்ளைகளான ராமாத்தாள், துளசிமணி, மாராத்தாள் ஆகியோர் 1,3,4 பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. எனது தாத்தாவின் ஆண் பிள்ளைகளான கருப்ப கவுண்டர் 1–ம் வாதி, ராமசாமி 5–ம் பிரதிவாதி, ராசன் (எ) பொன்னுச்சாமி 2–ம் பிரதிவாதி ஆவர். 4–ம் பிரதிவாதி மாராத்தாள் எனது அத்தை. இந்த தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே அ.வ.எண்.386/2014 என்ற வழக்கை பாகம் கேட்டு எனது தந்தை கருப்பு கவுண்டரும், 5–ம்

பிரதிவாதியான ராமசாமியும் சேர்ந்து தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கானது திருப்பூர் சார்பு நீதிமன்றத்திலிருந்து, அவிநாசி சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அ.வ.எண்.43/2015 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தும், இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். அந்த அ.வ.எண்.43/2015 வழக்கில் புதிய வழக்கு தாக்கல் செய்ய போவதாக சொல்லி ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் பிறப்பித்த உத்தரவு நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம்.

3. அந்த மனுவில் வேறு நபர்களை கட்சி சேர்க்க வேண்டியும், வேறு சில சொத்துக்களை சேர்க்க வேண்டியும் உள்ளதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அதேபோல் அந்த நபர்களின் முகவரியையும், சொத்துக்களின் புதிய ரீ–சர்வே எண்களையும் சேர்க்க வேண்டியுள்ளது என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் 14.07.1999–ம் தேதியிட்ட ஆவணத்தை பற்றியும், 07.02.1979–ம் தேதியிட்ட ஆவணத்தை பற்றியும், 12.02.1975–ம் தேதியிட்ட ஆவணங்களை பயன்படுத்திதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1936–ம் ஆண்டு கிரைய பத்திரம், 1979–ம் ஆண்டு கிரைய பத்திரம் ஆகிய இரண்டு பத்திரங்கள் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்குத் தெரியும். மற்ற ஆவணங்கள் என்னென்ன ஆவணங்கள் என்று பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த வழக்கில் அ.வ.எண்.43/2015 வழக்கை எனது அப்பாவும், ராமசாமியும் சேர்ந்து தான் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

ஆனால் இந்த வழக்கில் ராமசாமியை 5–ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்து தாக்கல் செய்துள்ளதற்கு சட்டப்படியான காரணம் ஏதேனும் உண்டா என்றால் ராமசாமி எங்களுடன் போக்குவரத்து குறைவாக இருந்ததால் அவரை எதிர்தரப்பினராக சேர்த்துள்ளோம்.

4. மேற்படி விபரத்தை எனது அப்பா இந்த தாவா பிராதுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை எனது அப்பா மட்டும் தான் தாக்கல் செய்துள்ளார். வேட்டுவபாளையம் கிராமம் க.ச.எண்.449 ல் 1.61 செண்ட் பொதுவில் 6–ல் ஒரு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சத்தியமங்கலம் வட்டம், தொட்டம்பாளையம் கிராமம் க.எண்.40 ல் 3.50 சென்ட் ல் பொதுவில் 6–ல் ஒரு பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். க.ச.எண்.449–ல் யார் யாருக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் அம்மாசை கவுண்டர் மற்றும் மாரப்ப கவுண்டருக்கும் இடையே 1971–ல் நடந்தது. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் அசல் யாரிடம் உள்ளது என்றால் அம்மாசை கவுண்டர் அல்லது மாரப்ப கவுண்டரிடம் உள்ளது. தற்போது அந்த பத்திரம் யாரிடம் உள்ளது என்று எனக்குத் தெரியாது. 1971–பத்திரத்தில் சொத்துக்கள் அனுபவத்திற்காக மாரப்ப கவுண்டர் மற்றும் அம்மாசை கவுண்டரின் சகோதரி பெரியக்காள் அவருடைய ஆயுட்காலம் வரை அனுபவித்து பின்னிட்டு மாரப்ப கவுண்டர் மற்றும் அம்மாசை கவுண்டர் அனுபவித்து கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.449– காலையில் 91 சென்ட், 75 சென்ட் பூமி அம்மாசை கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதே பூமியில் மாரப்ப

கவுண்டருக்கு அதே அளவு இன்னொரு பூமி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வேறு எந்த சொத்துக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் வேறு சொத்துக்கள் எதுவும் எழுதப்படவில்லை. குரும்பபாளையத்தில் உள்ள நத்தம் வீடு இந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. அதில் மாரப்ப கவுண்டருக்கு வந்த இடத்தை அவர் விற்று விட்டார். அதே ஆவணத்தில் கருமாபாளையம் கிராமத்தில் உள்ள மாரப்ப கவுண்டர் மற்றும் அம்மாசை கவுண்டர் இரண்டு பேருக்கும் சேர்ந்து தலா 10 ஏக்கர் பூமி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மாரப்ப கவுண்டர் சுமார் 4 முதல் 5 ஏக்கர் பூமியை விற்று விட்டார். அம்மாசை கவுண்டர் மகன் பொன்னுச்சாமி, ராமசாமி ஆகியோரும் பூமிகளை விற்று விட்டார்கள். அவர்கள் அவர்களுக்கு பாகமாக வந்த சொத்துக்களை தான் விற்றுள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு எங்கள் தரப்பில் ஆட்சேபணை எதுவும் அப்போது தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

5. எனது அப்பா கருப்ப கவுண்டர் கருமாபாளையம் கிராமத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து எனது பெயருக்கு 14.05.2012–ம் தேதியில் தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் 14.05.2012–ம் தேதியிட்ட பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1

ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பி.வா.சா.ஆ.1—ல் 12.02.1975—ம் தேதியிட்ட பாக சாசனத்தை பற்றி அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையின் படியும், மற்ற ஆவணங்களின் படியும் வந்த சொத்துக்களை சுயமாக அடைந்து அவற்றை பொறுத்து தான் தானசெட்டில்மெண்ட் எழுதி வைப்பதாக தான் அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகமாக வந்த சொத்துக்கள் அவரவர்களுடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவ்வாறு வந்த சொத்துக்களை அவர்கள் தனித்தனியாக அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பாகமாக வந்த சொத்துக்களை அந்தந்த நபர்கள் விற்பனையும் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த தாவா சொத்து மேற்படி பாகப்பிரிவினையில் கொண்டு வராத சொத்து ஆகும். அம்மாசை கவுண்டர் கடந்த 19.07.2013—ம் தேதியில் ஒரு தான பாகசாசன பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். அந்த வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் ஆவணத்தில் 14.07.1999—ம் தேதியிட்ட பாகப்பிரிவினையில் பாகமான எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அம்மாசை கவுண்டர் எழுதி தருவதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 14.07.1999—ம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை நாங்கள் ஒத்துக்கொள்கிறோமா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றும் மாறாக அந்த பாகப்பிரிவினை ஆவணத்தின் பேரில் தான் நாங்கள் இந்த வழக்கையும் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**